## பிரதம மந்திரி ஜீவன் ஜோதி பீமா யோஜனாவின் (PMJJBY) கீழ் கிளெய்மிற்கு பணம் வழங்கும் நடைமுறை

கிளெய்மிற்கான ரூ. 2,00,000/- தொகை கணக்குதாருடைய நியமனதாரருக்கு (தாரர்களுக்கு) வழங்கப்படும். 18 வயது (நிரம்பிய பிறகு) முதல் 55 வயது (பிறந்தநாள் அருகில்) எட்டும் வரை வருடாந்திர புதுப்பிப்புத் தேதியில் ஒரு நபருக்கு காப்பீடு வழங்கப்படும். 55 வயதை (பிறந்தநாள் அருகில்) எட்டிய பிறகு இதைப் பெறும் தகுதி முடிந்துவிடும். வங்கிக் கணக்கு முடிக்கப்பட்டாலோ அல்லது காப்பீட்டை அமலில் வைப்பதற்கு போதிய தொகை கணக்கில் இல்லாவிட்டாலோ காப்பீட்டைப் பெறும் தகுதி முடிந்துவிடும்.

இறப்பு நேர்விற்கான ரூ. 2,00,000/- காப்பீட்டுத் தொகை இண்டியாஃபர்ஸ்ட் கம்பெனியால் வழங்கப்படும். அதற்கான நடைமுறை பின்வருமாறு:

**நியமனதாரர் மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள்:**

1. காப்பீடு செய்யப்பட்ட உறுப்பினர் சேமிப்புக் கணக்கு வைத்துள்ள வங்கிக்கு நியமனதாரர் சென்று காப்பீடு செய்யப்பட்டவரின் இறப்புச் சான்றிதழைக் காட்ட வேண்டும்.
2. கிளெய்மிற்கான படிவத்தையும், டிஸ்சார்ஜ் ரசீதையும் வங்கியிலிருந்து பெற வேண்டும். அதை இண்டியாஃபர்ஸ்ட் நிறுவனத்தின் இணையதளத்திலிருந்தும் தகவலிறக்கம் செய்து கொள்ளலாம்.
3. நியமனதாரர் கிளெய்ம் படிவத்தையும் டிசார்ஜ் ரசீதையும் நிரப்ப வேண்டும்.
4. அந்த கிளெய்ம் படிவத்தையும் டிஸ்சார்ஜ் ரசீதையும், இறப்புச் சான்றிதழுடன் சேர்த்து அதை வங்கி கிளைக்குக் கொடுக்க வேண்டும். அதோடு நியமனதாரரின் வங்கிக் கணிக்கின் ரத்து செய்யப்பட்ட காசோலையின் நகலையும் தர வேண்டும்.

**வங்கி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்**

1. வங்கிக்கு இறப்பு நேர்வின் தகவல் வந்து சேர்ந்தவுடன் அவர்கள் காப்பீடு செய்யப்பட்ட உறுப்பினரின் காப்பீடு அமலில் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். அதாவது காப்பீடு செலுத்த வேண்டிய வருடாந்திர தேதியில் ஜூன் 1 ஆம் தேதி, உறுப்பினரின் இறப்பிற்கு முன்பாக புதுப்பிப்பு பிரீமியம் அவரது வங்கிக் கணக்கிலிருந்து கழிக்கப்பட்டு அத்தொகை இண்டியாஃபர்ஸ்ட் லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு செலுத்தப்பட்டுள்ளதா என்று பார்க்க வேண்டும்.
2. வங்கி கிளெய்ம் படிவம் மற்றும் தனது பதிவேடுகளில் உள்ள நியமனதாரரின் விவரங்களை பரிசீலிக்க வேண்டும்.
3. நியமனதாரர் கொடுத்த கிளெய்ம் படிவம் மற்றும் டிஸ்சார்ஜ் ரசீதில் இணைக்கப்பட்டுள்ள தாள்களில் இருக்கும் விவரங்களை வங்கி நிரப்ப வேண்டும்.
4. கிளெய்ம் விவரங்களுடன் பின் வரும் ஆவணங்களை இண்டியாஃபர்ஸ்ட் லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு வங்கி அனுப்பி வைக்க வேண்டும்.
   a. நிரப்பப்பட்ட கிளெய்ம் படிவம்
   b. இறப்புச் சான்றிதழ்
   c. டிஸ்சார்ஜ் ரசீது மற்றும் நியமனதாரரின் ரத்து செய்யப்பட்ட காசோலையின் நகல்.

IndiaFirst LIFE INSURANCE

A Joint Venture of Bank of Baroda Legal & General Andhra Bank

*இண்டியாஃபர்ஸ்ட் லைஃப் இன்ஷ்யூரன்ஸ் முகவரி*

PMJJBY - கிளெய்ம் டிபார்ட்மெண்ட்

இண்டியாஃபர்ஸ்ட் லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்,

301, ஆ விங், தி க்யூப், இன்ஃபினிட்டி பார்க்,

தின்தோஷி, ஃபிலிம் சிட்டி சாலை,

மலாடு (கிழக்கு) , மும்பை 400097

Contact Person: Mr. Shankar Patil

Phone No.: 022-3325 9743

Mail ID: claims.pmjjby@indiafirstlife.com

**இண்டியஃபர்ஸ்ட் லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள்.**

1. கிளெய்மிற்கான படிவம் தேவைப்படும்படி எல்லா விதத்திலும் முழுமையாக இருக்கிறதா என்று பரிசீலிக்க வேண்டும். அவ்வாறு இல்லை என்றால் அவற்றை வங்கியிடம் கேட்டு பெற வேண்டும்.
2. கிளெய்ம் ஏற்றுக் கொள்ளப்படும்படி இருந்தால், கிளெய்ம் டீம் உறுப்பினரின் காப்பீடு அமலில் இருக்கிறதா என்றுபார்க்க வேண்டும். வேறு எந்த கணக்கின் மூலமாகவும் கிளெய்மிற்கு பணம் வழங்குதல் கூடாது.
3. PMJJBY மூலம் கிளெய்மிற்கு இருமுறை பணம் வழங்கப்படாமல் இருப்பதை உறுதி செய்து கொள்ளவும். கிளெய்மிற்கு பணம் வழங்கப்பட்டால் அது பற்றி நியமனதாரருக்கு தகவல் அனுப்ப வேண்டும் அதன் நகலை வங்கிக்கு அனுப்ப வேண்டும்.
4. காப்பீடு அமலில் இருந்து, அந்த உறுப்பினருக்கான தொகை கொடுக்கப்பட்டிராவிட்டால், நியமனதாரின் கணக்கிற்கு தொகை செலுதப்பட வேண்டும். அது பற்றி நியமனதாரருக்கு தகவல் அனுப்ப வேண்டும் அதன் நகலை வங்கிக்கு அனுப்ப வேண்டும்.
5. கிளெய்மிற்கான பணம் நேஷனல் எலெக்ட்ரானிக் ஃபண்டு டிரான்ஸ்ஃபர் (NEFT) மூலம் மட்டுமே வழங்கப்பட வேண்டும்.

கிளெய்ம் படிவம் இண்டியாஃபர்ஸ்டின் தலைமை அலுவகத்திற்கு நியமனதாரரால் சமர்ப்பிக்கப்பட்டால், இண்டியாஃபர்ஸ்ட் லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனி அதை இறந்தவர் கணக்குவ் வைத்திருந்த வங்கி கிளைக்கு பரிசீலனைக்காக உடனடியகா அனுப்பி வைக்க வேண்டும். அந்த வங்கிக் கிளை விவரங்களைப் பரிசீலித்து, கிளெய்மை மேல் பரிசீலனைக்காக இண்டியாஃபர்ஸ்ட் லைஃப் இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியின் தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கும்.